இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2018.09.14 ஆந் திகதிய 2089ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.09.10 ஆந் திகதி தினமின, டெய்லிநியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/ 3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியில் அமைந்த T&H ஏல நிறுனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்களால் 2018.11.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை அதிகாரிபற்றுவில் மஹர பிரதேசசபை எல்லைகளுள் மஹர பிரதேச செயலகம் மற்றும் பஹல கரகஹஅமுன கிழக்கு கிராம அலுவலர் பிரிவு இல. 249/A, பஹல கரகஹஅமுன கிராமத்தில் அமைந்த அலுபோகஹவத்த மற்றும் நெதுன்கஹவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எச். எம். எஸ். பெரேரா தயாரித்த 2014.11.25 ஆந் திகதியிட்ட வரைபட இல. 5543 இல் விபரித்த துண்டு X என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: முன்னர் அன்றன் வீரசேகர உரிமைகோரிய காணியும்; கிழக்கு: சுனில் விஜேசிங்ஹவின் காணியும் வரைபட இல. 7526 இல் விபரித்த 15 அடி அகலப்பாதையும்; தெற்கு : முன்னர் ரோஹினி செனெவிரத்ன உரிமைகோரிய காணியும்; மேற்கு : எம். எல். பீ. வீ. ராஜகருணா மற்றும் டப்ளியு. டீ. குணவர்தன ஆகியோரின் காணியும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 5543 இன் படி முப்பத்தேழு தசம் ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 37.7பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் வளர்பவையும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட துண்டு X கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேற்குறிப்பட்ட பஹல கரகஹஅமுன கிராமத்தில் அமைந்த நெடுங்கஹவத்த மற்றும் அலுபோகஹவத்த என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி. எப். ஜே. பெரேரா தயாரித்த 1980.11.20 ஆந் திகதியிட்ட வரைபட இல. 7526 இல் விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : அதே காணியின் பாகமும்; கிழக்கு : தேசிய வீடமைப்பு ஆணையாளர் சுவீகரித்த அதே காணியின் பாகமும்; தெற்கு: தற்சமயம் தெரேசா ரோஹினி செனெவிரத்னவின் அதே காணியின் பாகமும்; மேற்கு : தற்சமயம் கே. எல். பி. வி. ராஜகருணா மற்றும் டப்ளியு. டி. குணவர்தன ஆகியோரின் காணியின் பாகமும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 7526 இன் படி முப்பத்தேழு தசம் ஏழு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 37.7பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் வளர்பவையும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் M 190/19 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்குறிப்பிட்ட வரைபட இல. 7526 இல் விபரித்த பாதைகள் மீதான வழி உரிமையும் ஆகும்.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) S. A. V. R. சுபசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கணேமுல்ல கிளை.

10- 1412

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2018 இன் இல. 828

MOD/DEF/02/01/ARF/RET/1725

**இலங்கைத் தரைப்படை-நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல் மற்றும் இலங்கை தரைப்படை நிரந்தரப்படையின் (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2018, செத்தெம்பர் 03 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஜெனரல் அகம்பொதி பியல் த சொயிசா விக்ரமரத்ன, ஆர்டப்பீ, என்டீயூ, பீஎஸ்சீ (உ/60158)

**நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்.**

கீழ்க்காணும் பெயருடைய சிரேஷ்ட உத்தியோகத்தர் 2018, செத்தெம்பர் 03 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

மேஜர் ஜெனரல் அகம்பொதி பியல் த சொயிசா விக்ரமரத்ன, ஆர்டப்பீ, என்டீயூ, பீஎஸ்சீ (உ/60158)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 03.

10- 1410

2018 இன் இல. 829

MOD/DEF/02/01/ARF/RET/1735

**இலங்கைத் தரைப்படை-நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

**இளைப்பாறுதல்**

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2018, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்டன் தேவா தன்திரிகே அஸோக பண்டார, கொப (உ/68377)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூன் 29.

10- 1411

---

## அரசாங்க அறிவித்தல்கள்

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல் (அத்தியாயம் 120)**

1. கீழ் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2018.10.26 ஆந் திகதி தொடக்கம் 2018.11.09 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2018.11.16 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீதியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

எமது இல: ஆர்ஜீ/என்பீ/11/2/17/2017/ஏடு.தயா
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் 1<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | நிரல் 2<br>காணி பற்றிய விபரம் | நிரல் 3<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| கம்பஹா மாவட்டத்தின் கம்பஹா காணிப் பதிவகத்தின் B பிரிவின் 58 ஆவது புத்தகத்தின் 136 ஆவது ஏடு. | மேல் மாகாணத்தின் கம்பஹா மாவட்டத்தின் ராகம பற்று அலுத்குரு கோறளையில் குடெல்ல இல் அமைந்துள்ள "எலெக்சான்ரா எஸ்டேட்" என்னும் இடத்திற்கு அதிகாரம் பெற்ற அளவீட்டாளரான திரு. M.D.J.V. பெரேரா அவர்களினால் 1976.05.28 ஆந் திகதி அளவிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 3704 ஆம் இலக்கமுடைய அளவீட்டின் லொட் 4 A இற்கான எல்லைகள்.<br><br>வடக்கு: காணித்துண்டு இலக்கம் 3 உடைய பகுதி<br>கிழக்கு: காணித்துண்டு இலக்கம் 4B உடைய பகுதி<br>தெற்கு: நீர்கொழும்பில் இருந்து கொழும்புக்குச் செல்லும் பிரதான பாதை<br>மேற்கு : கிராமசபை பாதை<br><br>விஸ்தீரணம் 0ஏ: 1றூ: 0பர்ச். | 1. ஜோன் A.E. அமரதுங்க பி.நொ. ஆல் எழுதி உறுதிப் படுத்தப்பட்ட 1976.08.01 ஆந் திகதிய 2040 ஆம் இலக்க முடைய அறுதி உறுதி. |

10-1390

---

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(அத்தியாயம் 120)**

1. கீழ் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2018.10.26 ஆந் திகதி தொடக்கம் 2018.11.09 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு ஹோமாகமை காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2018.11.16 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீ தியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

என். சி. விதானகே,
பதிவாளர் நாயகம்.

எமது இல: ஆர்ஜீ/என்பீ/11/2/84/2018/ஏடு.தயா
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் 1<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | நிரல் 2<br>காணி பற்றிய விபரம் | நிரல் 3<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம காணிப் பதிவகத்தின் G பிரிவின் 617 ஆவது புத்தகத்தின் 50 ஆவது ஏடு | மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் பல்லேபற்று ஹேவாகம் கோறளையில் தலங்கம வடக்கில் அமைந்துள்ள "தெல்கஹவத்த" என்னும் இடத்திற்கு அதிகாரம் பெற்ற அளவீட்டாளர் பதிரண அவர்களினால் 1984.11.18 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 393 ஆம் அளவீட்டின் லொட் 02 இற்கான எல்லைகள்:-<br><br>வடக்கு: லொட் 1<br>கிழக்கு: லொட் 3<br>தெற்கு: கோட்டகேவத்த வீதி<br>மேற்கு: பாதை<br><br>விஸ்தீரணம் ஏ:0 ரூ:0 பேர்ச்: 11.5 | 1. L. V. E. த சில்வா பி.நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1984.12.11 ஆந் திகதிய 566 ஆம் இலக்கமுடைய நன்கொடை உறுதி. |

10-1391

---

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(அத்தியாயம் 120)**

1. கீழ் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2018.10.26 ஆந் திகதி தொடக்கம் 2018.11.09 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு குருநாகல் காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2018.11.16 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீ தியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

எமது இல: ஆர்ஜீ/என்பீ/11/2/107/2017/ஏடு.தயா
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் 1<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | நிரல் 2<br>காணி பற்றிய விபரம் | நிரல் 3<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் காணிப் பதிவகத்தின் D பிரிவின் 870 வது புத்தகத்தின் 02 வது ஏடு | வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் தேவமொதி ஹத் பற்று தேவமெதி உடுகஹா கோறளையில் யாலச இல் அமைந்துள்ள "தனஹேனே லந்த ஹேன தற்பொழுது வத்தை" என்னும் காணிக்கான எல்லைகள்.<br><br>வடக்கு : லூகஸ் பர்னாந்துக்கு உரித்தானதாக இருந்த ருக்அத்தனே வத்த;<br>கிழக்கு : தன் ருக்அத்தன வத்த மற்றும் சோமாலியா யத்தெஸ்ஸா மற்றும் ஏனையோருக்கு உரித்தான தோட்டம்;<br>தெற்கு மற்றும் மேற்கு : இந்த உறுதியின் கொள்வனவாளர் மற்றும் டீ.எம். அப்புஹாமிக்கு உரித்தான இந்தக் காணியின் எஞ்சிய பகுதி.<br><br>விஸ்தீரணம் ஏ:02 றூ:03 பேர்ச்: 00 | 1. M. B. விஜேகோன் பி.நொ. ஆல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட 1982.01.18 ஆந் திகதிய 1065 ஆம் இலக்கமுடைய அறுதி உறுதி. |

10-1392

---

**காணிப் பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(அத்தியாயம் 120)**

1. கீழ் குறிப்பிட்ட பட்டோலையில் காணப்படும் 2 ஆம் நிரலில் விபரிக்கப்படும் காணிகள் 1 ஆம் நிரலில் காணப்படுவதும் கிழிந்தோ அல்லது காணாமலோ போயிருக்கும் இருமடித்தாள்கள் சம்பந்தமான 3 ஆம் நிரலில் காணப்படும் உறுதிகளிலிருந்து தற்காலிகமாக காணிப்பதிவேடு (மீட்டெழுதிய இருமடித்தாள்) கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 120) 4 ஆம் பிரிவின் கீழ் மீள அமைக்கப்பட்டிருக்கின்றது.

2. 2018.10.26 ஆந் திகதி தொடக்கம் 2018.11.09 ஆந் திகதி வரை அனைத்து வேலை நாட்களிலும் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களை விரும்பியவர்கள் பார்வையிடுவதற்கு குருநாகல் காணிப்பதிவகத்தில் வைத்திருக்கப்படும்.

3. திருத்தியமைக்கப்படவிருக்கும் இருமடித்தாள்களில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏதேனும் விபரங்கள் சம்பந்தமாக பதிவு சம்பந்தமான எவரேனும் ஆட்சேபனையினை தாக்கல் செய்யவோ அல்லது தவறாக விடப்பட்டிருக்கும் விபரங்களை அல்லது பதிவுகளை சேர்க்கப்பட வேண்டுமெனவோ விரும்பின் அவை தொடர்பாக முறைப்பாடுகள் அல்லது கோரிக்கைகளைச் செய்வோர் கீழே கையொப்பமிட்டுள்ளவரது பெயருக்கு எழுத்து மூலம் 2018.11.16 ஆந் திகதிக்குப் பிந்தாமல் பதிவஞ்சல் மூலம் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும். ஆட்சேபனைகள் அல்லது கோரிக்கைகள் ஆவண ரீ தியான ஆதாரங்களுடன் அனுப்பப்படுதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

எமது இல: ஆர்ஜீ/என்பீ/11/2/118/2017/ஏடு.தயா
பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| நிரல் 1<br>பதிவு செய்யப்பட்ட புத்தகங்களில் சிதைவடைந்த ஏடுகள் பற்றிய விபரங்கள் | நிரல் 2<br>காணி பற்றிய விபரம் | நிரல் 3<br>பதிவு செய்யப்பட்ட உறுதிகள் பற்றிய விபரம் |
|---|---|---|
| குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் காணிப் பதிவகத்தின் L.D. O. 355/1282/97 ஆவது ஏடு | வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் பொல்பித்திகம பிரதேச வருமான அலுவலர் பிரிவின் 348 கிரிபமுனேகம கிராம அலுவலர் பிரிவின் கிரிபமுனேகம என்னும் கிராமத்தில் அமைந்துள்ள காணிக்கு அளவீட்டதிபதியினால் அளவிட்டுத் தயாரிக்கப்பட்ட இலக்கம் 3027 உடைய அளவீட்டின் காணிக்கான எல்லைகள்.<br><br>வடக்கு: பாதைக்காக ஒதுக்கப்பட்டது;<br>கிழக்கு: விக்ரமசிங்க இன் காணி;<br>தெற்கு: புஞ்சி பண்டா இன் காணி;<br>மேற்கு: ஹீன் பண்டா மற்றும் புஞ்சி பண்டா இன் காணி.<br><br>விஸ்தீரணம் ஏ:02 றூ:00 பேர்ச்: 00 | 1. சனாதிபதி செயலாளரினால் 1996.08.20 ஆந் திகதி அளிக் கப்பட்ட இலக்கம் குரு/அளி/94518 உடைய அளிப்புப் பத்திரம். |

10-1393

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும்*
*1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும்*
*திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2018.08.10 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது:-

"1. பிரசித்த நொத்தாரிசு ஈ. கே. எச். எம். கருணாதிலக்க அத்தாட்சிப்படுத்திய 28.04.2016 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4818 இன் பேரில் மல்வான, பாடசாலை வீதி, இல. 183A என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சிங்ஹாசன நிறுவனத்திடமிருந்து (பங்காளர்கள்: மல்வான, பாடசாலை வீதி, இல. 183 திரு. அப்தும் ஹபீல் மொஹமட் ரிகாஸ் மற்றும் மொஹமட் தாஹா அப்தும் முஆஸ்) மேலதிகப்பற்று வசதி மீது முதலும் 13.07.2018 ஆந் திகதி வரை வட்டியும் பதினைந்து இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து பதின்மூன்று ரூபா எழுபது சதமும் (ரூபா. 15,95,013.70) அத்துடன் பதினைந்து இலட்சம் ரூபாவில் (ரூபா 15,00,000.00) ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்தில் 2018.07.14 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், BOC திரிய திட்டக்கடன் மீது முதலும் 2018.07.13 ஆந் திகதி வரை வட்டியும் நாற்பத்தெட்டு இலட்சத்து நாற்பதாயிரத்து ஐநூற்று எழுபத்து நான்கு ரூபா முப்பத்தொன்பது சதங்களும் (ரூபா 48,40,579.39) அத்துடன் நாற்பத்தைந்து இலட்சத்து எழுபத்திரண்டு ஆயிரத்து நூற்று எண்பத்தொரு ரூபா நாற்பத்தாறு சதங்களில் (ரூபா. 45,72,181.46) ஆண்டுக்கு எட்டு (8%) வீதத்தில் 2018.07.14 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.

2. 2016.04.28 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 4818 இன் பேரில் மேலதிகப்பற்று வசதி மீது முதலும் 2018.07.13 ஆந் திகதி வரை வட்டியும் பதினைந்து இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரத்து பதின்மூன்று ரூபா எழுபது சதமும் (ரூபா 15,95,013.70) அத்துடன் 2018.07.14 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவும் (397ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பனைக்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T & H ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, ஹங்வெல்லக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம் கேகாலை மாவட்டம் பெலிகல் கோரளை கீரவெலிபற்றுவில் வரக்காபொல கிராம அலுவலர் பிரிவு வரக்காபொல பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் வரகாபொல கிராமத்தில் அமைந்த "குருகல்வத்த" என அழைக்கும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். இத்தமல்கொட தயாரித்த 2014, செத்தெம்பர் 11 ஆந் திகதியிட்ட வரைபட இல. 216/2014 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில் : சித்தி ரஹீம் உரிமைகோரும் அதே காணியின் பாகமும்; கிழக்கில் : அரசாங்கக் காணியும்; தெற்கில் : அதே காணியின் மீதிப்பாகமும் ; மேற்கில்: தேவிகா பெரேரா உரிமைகோரும் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 216/2014 இன் படி இருபத்தொன்று தசம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 21.4பே.) விஸ்தீரணமுடையது. இது கேகாலை காணிப்பதிவகத்தில் K93/18 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.

திருமதி யூ. ஏ. எஸ். சீ. கருணாரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹங்வெல்ல.

10-1414

---

## மக்கள் வங்கி - பண்டாரவளை கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழான நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

29.06.2018 ஆந் திகதியன்று நடைபெற்ற தங்கள் கூட்டத்தில் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29 டி ஆம் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பன்னிப்பிட்டி கொட்டாவை, கட்டுக்குருந்த ஆசிறி உயன, இல.1143/2 இல் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை கொண்டுள்ளதும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பீவீ 102124 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுமான திருவாளர்கள் மெதுலா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் பண்டாரவளை, ரஞ்சல்லாவை, இல.325 ஐச் சேர்ந்த யாப்பா முதியான்சலாகே ஜயசுந்தர யாப்பா என்ற யாப்பா முதியான்சலாகே ஜயசுந்தர ஆகியோர், மக்கள் வங்கியின் சார்பில் பதுளையை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு, கே. எம். ஏ. விஜேசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப் பட்டு 06.04.2016 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 6388 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் அத்துடன் மக்கள் வங்கிக்கு சொல்லப்பட்ட முறி இலக்கம் 6388 இன் மூலம் நாற்பத்தொரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று அறுபத்தாறு ரூபா எழுபது சதம் (ரூபா 41,51,766.70) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் அத்துடன் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் மக்கள் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, 07.03.2017 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஆண்டிற்கு பதினைந்து சதவீத (15%) மேலும் வட்டியுடனும் சேர்த்து நாற்பத்தொரு இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று அறுபத்தாறு ரூபா எழுபது சதம் (ரூபா 41,51,766.70) கொண்ட தொகையை சொல்லப்பட்ட மக்கள் வங்கி சட்டத்தின் "29எல்" பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்கள் எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முறி இல. 6388 இனால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக்க அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், யட்டிகிந்த பிரிவு, கும்பல்வெல கோறளை, பண்டாரவளை மாநகர சபை எல்லைகளுக்குள், பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவு, உடபேருவ கிராம அலுவலர் பிரிவு, உடகும்பல்வெல கிராமத்தில் அமைந்துள்ளதும் "குரகந்துரேபட்டான, அரம்பகஹ எல்லேபட்டான என்ற கெட்டம்பகஹ எல்லேபட்டான மற்றும் எட்டம்பகஹஎல்ல கட்டான" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. கே. ஆனந்த டபிள்யூ. டீ சில்வா அவர்களால் தயாரிக்கப்பட்டு 30.11.1999 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல.787 இல் துண்டு 1என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன - வடக்கு: சொல்லப்பட்ட வரைபட இல.787 இல் துண்டு 7 மற்றும் வீடுகளிலிருந்து பிரதான வீதிக்கான வீதி: கிழக்கு : வீதி மற்றும் துண்டு 2; தெற்கு : சொல்லப்பட்ட வரைபட இல. 787 இல் துண்டுகள் 2, 3 மற்றும் 4 ; மேற்கு: சொல்லப்பட்ட வரைபட இல. 787 இல் துண்டுகள் 4 மற்றும் 6. இது, பன்னிரண்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 12.0பே.) விஸ்தீரணமுடையது; பதுளை மாவட்ட காணி பதிவகத்தில் வீ44/94 இன்கீழ் பதிவு செய்யப்பட் டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
பதுளை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
பதுளை.

10-1429

---

## மக்கள் வங்கி (ஊவாபரணகம கிளை)

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

28.08.2018 ஆந் திகதியன்று நடைபெற்ற, தங்கள் கூட்டத்தில் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின்கீழ் மக்கள் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, வெலிமடை, வெலிமடைகமை உடலிந்தாவத்தை (தற்போது கட்டார், தோஹா, த. பே. இல. 17717 ஏரிசீசீ) ஐச் சேர்ந்த ஆறுமுகம் ரவீந்திர, மக்கள் வங்கியின் சார்பில் பதுளையை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு, கே. எம். ஏ. விஜேசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 17.07.2015 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 5608 மற்றும் 26.08.2016 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 6649, ஆகிய இரண்டின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் அத்துடன் மக்கள் வங்கிக்கு சொல்லப்பட்ட முறி இலக்கம் 5608 இன் மூலம் முப்பது இலட்சம் ரூபா (ரூபா. 30,00,000.00) கொண்ட தொகை மற்றும் சொல்லப்பட்ட முறி இலக்கம் 6649 இன் மூலம் ஒரு இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ஐ. அ. டொ. 1,00,000.00) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் அத்துடன் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறரன 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தினால் அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் மக்கள் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, 28.07.2018 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆண்டிற்கு பன்னிரண்டு தசம் ஐந்து சதவீத (12.5%) மேலும் வட்டியுடனும் சேர்த்து முப்பது இலட்சம் ரூபா (ரூபா. 30,00,000.00) கொண்ட தொகை மற்றும் 28.07.2018 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஆண்டிற்கு பதினாறு தசம் ஐந்து சதவீத (16.5%) மேலும் வட்டியுடனும் சேர்த்து ஒரு இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ஐ. அ. டொ. 1,00,000.00) கொண்ட தொகையை சொல்லப்பட்ட மக்கள் வங்கி சட்டத்தின் "29எல்" பிரிவின்கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்கள் எவையேனும் கொடுப்பனவுகள், பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 5608 மற்றும் 6649 ஆகியவற்றினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். இராமநாயக்க அவர்களால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடபலாத்த கோறளை, வெலிமடை பிரதேச சபை எல்லைகளுக்குள், வெலிமடை பிரதேச செயலாளர் பிரிவு, அம்பகஹகும்புற கிராம அலுவலர் பிரிவு, வெலிமடைகமை கிராமத்தில் அமைந்துள்ளதும் "உடலிந்தவத்தை மற்றும் தோவேவத்தை" மிகவும்திருத்தமாக "உடுலிந்தவத்தை" என அழைக்கப்படுவதுமான காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 09.10.1996 ஆந் திகதியன்று நிலஅளவை செய்யப்பட்ட வரைபட இல. 1015/ஏ இல் துண்டு 01 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 01 இன் எல்லைகளாவன - வடக்கு : பிரேமதாசவினால் உரிமைகோரப்படும் காணி; கிழக்கு : வீரசிங்ஹ மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்படும் நெல் வயல் ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1015 இல் துண்டு 3; மேற்கு : இக்காணியின் எஞ்சிய பாகம். இது. பதினெட்டு தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 18.5பே.) விஸ்தீரணமுடையது; பதுளை மாவட்டக் காணிப் பதிவகத்தில் என் 55/133 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழியுரிமையுடன் சேர்த்து :-

மேற்கூறப்பட்ட வெலிமடைகமை கிராமத்தில் அமைந்துள்ளதும் "உடலிந்தவத்தைமற்றும்தோவேவத்தை"மிகவும்திருத்தமாக "உடுலிந்தவத்தை" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 13.05.2015 ஆந் திகதியன்று நில அளவை செய்யப்பட்ட வரைபட இல. 4054/ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு 04(10 அடி அகல உட்புகுவீதி) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 04 இன் எல்லைகளாவன - வடக்கு: சொல்லப்பட்ட வரைபட இல. 4054 ஏ இல் துண்டு 2; கிழக்கு : சீரசிங்ஹ மற்றும் ஏனையோரினால் உரிமைகோரப்படும் நெல் வயல் மற்றும் சொல்லப்பட்ட வரைபட இல. 4054ஏ இல் துண்டு 5 (கிணறு); தெற்கு : சொல்லப்பட்ட வரைபட இல. 4054ஏ இல் துண்டு 5 (கிணறு) மற்றும் ஜயவர்தனவினால் உரிமைகோரப்படும் காணி: மேற்கு : சொல்லப்பட்ட வரைபட இல. 4054ஏ இல். துண்டு 4 மற்றும் துண்டு 3. இது ஆறு தசம் மூன்று பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 6.3பே.) விஸ்தீரணமுடையது ; பதுளை மாவட்ட காணி பதிவகத்தில் என் 51/101 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1015 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 4 உட்பட வரைபட இல. 4054ஏ இல் குறிப்பிடப்பட்ட காணியிலிருந்து பிரதான வீதிக்கான வீதி வழியிலும் மீதும் வழியேயுமான வழியுரிமையுடனும் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
பதுளை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
பதுளை.

10 - 1430

**மக்கள் வங்கி (கந்தேகெட்டி கிளை)**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

24.07.2018 ஆந் திகதியன்று நடைபெற்ற, தங்கள் கூட்டத்தில் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின்கீழ் மக்கள் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு தீர்மானம் விசேடமாகவும் ஏகமன தாகவும் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரக, குருவிட்தென்ன, தீகிரிகொல்ல, "உபாலி குரொசரிஸ்", இல. 66 ஐச் சேர்ந்த சமரக்கோன் முதியான்சலாகே உபாலி சமரக்கோன் மற்றும் திஸாநாயக்க முதியான்சலாகே விஜித்தமாலா திஸாநாயக்க ஆகிய இருவரும், மக்கள் வங்கியின் சார்பில் பதுளையை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு, கே. எம். ஏ. விஜேசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 29.04.2014 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 4180 மற்றும் பதுளையை சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு, ஜீ. கே. ஐ. கோணார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 03.10.2017 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 281 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் அத்துடன் மக்கள் வங்கிக்கு சொல்லப்பட்ட முறி இலக்கம் 4180 இன் மூலம் முப்பத்தேழு இலட்சத்து எழுபத்து நான்கு ஆயிரத்து நூற்று எழுபத்தெட்டு ரூபா இருபத்தைந்து சதம் (ரூபா. 37,74,178.25) கொண்ட தொகை மற்றும் சொல்லப்பட்ட முறி இலக்கம் 281 இன்மூலம் மூன்று கோடி இருபத்தாறு இலட்சம் ரூபா (ரூபா. 3,26,00,000.00) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்; 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் மக்கள் வங்கி பணிப்பாளர்கள் சபையானது, 31.12.2017 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஆண்டிற்கு பதினான்கு தசம் இரண்டு சதவீத (14.2%) மேலும் வட்டியுடனும் சேர்த்து முப்பத்தேழு இலட்சத்து எழுபத்து நான்கு ஆயிரத்து நூற்று எழுபத்தெட்டு ரூபா இருபத்தைந்து சதம் (ரூபா. 37,74,178.25) கொண்ட தொகை மற்றும் 01.03.2018 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதிவரை ஆண்டிற்கு பதின்மூன்று சதவீத (13%) மேலும் வட்டியுடனும் சேர்த்து மூன்று கோடி இருபத்தாறு இலட்சம் ரூபா (ரூபா. 3,26,00,000.00) கொண்ட தொகையை சொல்லப்பட்ட மக்கள் வங்கி சட்டத்தின் " 29எல்" பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்கள் எவையேனும் கொடுப்பனவுகள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிடுவதற்காக இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 4180 மற்றும் 281 இனால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவுகள் உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக்க அவர்களால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

1. ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், பின்தென்ன பள்ளேவத்த கோறளை, ரிதீமாலியத்த பிரதேச சபை எல்லைகளுக்குள், ரிதீமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவு, 13ஏ-குருவிட்தென்ன கிராம அலுவலர் பிரிவு, குருவிட்தென்ன கிராமத்தில் அமைந்துள்ளதும் "நிஷ்சாங்கயாகே கலகாவ ஹேன" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். கே. சீ. பிரேமசந்திர அவர்களால் தயாரிக்கப்பட்டு 06.04.2007 ஆந் திகதியன்று நில அளவை செய்யப்பட்ட வரைபட இல. 10.04.2017 இல் துண்டு 01 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 01 இன் எல்லைகளாவன- வடக்கு: வரைபட இல. ரொபோ பீ. பீ. 58 இல் துண்டு 6058 ; கிழக்கு: வரைபட இல. ரொபோ பீ. பீ. 58 இல் துண்டு 6058 மற்றும் சொல்லப்பட்ட வரைபட இல. 10.04.2007 இல். துண்டு 02; தெற்கு: வரைபட இல. ரொபோ பீ. பீ. 58 இல் துண்டு 6060; மேற்கு : வரைபட இல. ரொபோ பீ. பீ. 58 இல். துண்டு 6062. இது, இரண்டு றூட் சைவர் தசம் சைவர் எட்டு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 2றூ. 0.085பே.) (ஆனால் மிகவும் திருத்தமாக இரண்டு றூட் சைவர் தசம் எட்டு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 2றூ. 2பே.) விஸ்தீரணமுடையது; பதுளை மாவட்ட காணிப் பதிவகத்தில் ஆர் 07/104 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட குருவிட்தென்ன கிராமத்தில் அமைந்துள்ளதும் "நிஷ்சாங்கயாகே கலகாவ ஹேன" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். கே. சீ. பிரேமசந்திர அவர்களால் தயாரிக்கப்பட்டு 06.04.2007 ஆந் திகதியன்று நில அளவை செய்யப்பட்ட வரைபட இல. 10.04.2007 ஆந் திகதி இல. துண்டு 02 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கட்டிடங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 02 இன் எல்லைகளாவன - வடக்கு: துண்டு 01; கிழக்கு : வரைபட இல. ரொபோ பீ. பீ. 58 இல். துண்டு 6058; தெற்கு : வரைபட இல. ரொபோ பீ. பீ. 58 இல் துண்டு 6060; மேற்கு : துண்டு 01. இது, முப்பத்திரண்டு தசம் இரண்டு இரண்டு ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 32.22பே.) விஸ்தீரணமுடையது ; பதுளை மாவட்ட காணிப் பதிவகத்தில் ஆர் 07/123 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
பதுளை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
பதுளை.

10 - 1428

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**
**(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)**

*2011 ஆம் ஆண்டின் 01 மற்றும் இல.19 இனால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கே எம் சந்ரலத்தா மற்றும் கே. ஜீ. எஸ். ஆர். குமார
கணக்கு இல. 0093 5000 5479

2018.05.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு-2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக பதுள்ளை பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. ஜீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, ஒகத்து 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 1727 மற்றும் 2017, செத்தெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 2209 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் கொக்கல மரக்களகே சந்ரலத்தா மற்றும் கனங்கராலலாகே சுரேஷ் குமார என்பவர்களின் கடன்பட்டவர் என்ற வகையில் கூறப்பட்ட கொக்கல மரக்களகே சந்ரலத்தா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இலக்கங்கள் 1727 மற்றும் 2209 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாவில் எழுபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து நாநூற்று தொண்ணூற்றி ஆறு ரூபா ஐம்பத்தி ஒரு சதம் (ரூபா. 74,87,496.51) 2018, மே 03 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட எழுபத்தி நான்கு இலட்சத்து என்பத்தி ஏழாயிரத்து நாநூற்று தொண ணூற்றி ஆறு ரூபா ஐம்பத்தி ஒரு சதம் (ரூபா 7,487,496.51) 2018, மே 04 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 1727 மற்றும் 2209 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்தி ஒன்பது இலட்சத்து எழுபதினாயிரம் ரூபா (ரூபா. 69,70,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 1727 மற்றும் 2209 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், சொரனதொட்ட கோரலே, சொரனதொட்ட பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் ரிதீப்பன கிராம அலுவலர் பிரிவின் எல்ஹேன்மட கிராமத்தில் அமைந்த "ரிதீப்பன எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணியின் 1997, ஒகத்து 28 ஆந் திகதியிடப்பட்ட மற்றும் இல. Badu/Pra/39558 எனும் ஜயபூமி மானியத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித் துண்டின் எல்லைகளாவன - வடக்கு : லொட் 247 மற்றும் திலக்கரத்ன என்பவர் உரிமம் கோரும் காணி; கிழக்கு : சரத்சந்ர என்பவர் உரிமம் கோரும் லொட் 71; தெற்கு : சரத்சந்ர சோமகே மற்றும் அலடின் என்பவர்கள் உரிமம் கோரும் காணி மற்றும் மேற்கு : லொட் 163 (பதுளை - மஹியங்கனை வீதி ஒதுக்கம்), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் ஒன்று நான்கு எட்டு ஹெக்டெயர்கள் (Hec. 0.148) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட மானிய இல. Badu/Pra/39558 எனும் வரைப்படத்திற்கு அமைவாக பதுளளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LDO/K 02/44 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

FVP 88 இற்கு அமைய மேற்கூறப்பட்ட காணி கீழ்க் கண்டவாறு விபரிக்கப்பட்டுள்ளது :

கூறப்பட்ட எல்ஹேன்மட கிராமத்தில் அமைந்த "ரிதீப்பன எஸ்ட்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்திற்காக பதுளை நில அளவை சுப்பிரிண்டென்டன் இனால் தயாரிக்கப்பட்ட 1988, சனவரி 09 ஆந் திகதியிடப்பட்ட (மேலதிக 17) FVP இல. 88 இல் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 248 என குறிப்பிடப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன - வடக்கு : லொட்கள் 247 மற்றும் 71; கிழக்கு : லொட்கள் 71 மற்றும் 167; தெற்கு : லொட்கள் 167 மற்றும் 163 ; மற்றும் மேற்கு : லொட் 163 மற்றும் 247, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் ஒன்று நான்கு எட்டு ஹெக்டயார்கள் (Hec. 0.148) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. FVP இல. 88 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-1451/1

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

**குறிப்பு**.- மேற்படி தலைப்பின் கீழான மேலதிக அறிவித்தல்களை தயவுசெய்து 2018.10.26 ஆந் திகதி பிரசுரமாகும் அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk